வடிந்த பின் நீரில் ஊறி அழுகி வீங்கி அனாதைப் பிணமாய் அடையாளம் தெரியாத அளவுக்குப் புழுத்துப் போய் சடல மூட்டையாய் எடுத்து வரப்படுவாளோ? கடல் அலை கொண்டு வந்து கரையில் தள்ளுமோ?

வாய்விட்டுக் கதறி ஒப்பாரி வைத்தாள் சின்னப்பொண்ணு. சாக்கடை நீருக்கு அம்மாக்காரியின் எலும்பும் தோலுமான தேகத்தில் அப்படி என்னதான் பேராசையோ..?

என்னைப் பெத்த அம்மாவே!
என்னைப் பெத்த அருமையென்ன ?
பேரிட்ட நேர்த்தி என்ன ?
வளர்த்து விட்ட அருமையென்ன ?
ஆத்தக் குறுக்கடைச்சி
அழகுச்சம்பா நெல் வெதைச்சி
ஆத்துத் தண்ணி வத்தவந்த
அழகுச்சம்பா வாடுறனே
குளத்தைக் குறுக்கடைச்சி
குலவிளக்கு நெல் வெதைச்சி
குளத்துத் தண்ணி வத்தவந்த
பெத்தமக குலவாழை வாடுறனே
தண்டியலு போன இடம் எனக்குத்
தடமே தெரியலியே! உங்க
பல்லக்குப் போன தடம் எனக்குப்
பாதை தெரியலியே!

- மார்பிலடித்துக் கொண்டு பொங்கிப் பொங்கி அழுதாள். தாழாங்குப்பமே சின்னப்பொண்ணுவின் குடிசை முன்னால் குவிந்தது. மழையையும். நினைக்காமல் எல்லோரும் வந்தார்கள். ஒப்பாரி வைக்கவா? சடலத்தைப் பார்த்துப் பார்த்துத் துக்கம் பொங்கவா? ஒண்ணும் புரியவில்லை.

“என்னாங்கடி அநியாயம் இது? பயாஸ்கோப்பு கணக்கால்ல நடந்துருக்கு”

இப்படிக் கன்னத்தில் கை வைத்து இடிந்து போனார்கள்.

“காத்து மாதிரி வாரதும் தெரியாது. போறதும் தெரியாது. அவஉண்டு.. சோலி உண்டுன்னு கெடப்பா..அவ பொறப்பாடும் கண்ணுங் காதும் வச்சா மாதிரியா ஆவணும்?”





இப்படி வருந்தினார்கள்.

“யார்றி பைத்தியக்காரி அவளுக்குப் பொறப்பாடு ஆச்சா இல்லியான்னே தெரிலியே...பொதை மணல் கணக்காக் குழி காவு வாங்கிடுச்சே”...

“இங்க பார்றா..வெள்ளமாத் தண்ணி அடிச்சுப் பொரண்டு ஓடுதாங்காட்டி. அதுக்குள்ளாற விழுந்தவ பூவாட்டம் பொழைச்சு வருவாளங்காட்டியும். ஆலத்தி கரைச்சு வச்சுக்கிட்டு வாசலைப் பார்த்துக் குந்து..அடப் போவியா.. அவ வாங்கிட்டு வந்த அரிசி அம்புட்டுத்தேன்...”

“உசிரோட இருந்தப்ப் மட்டும் அம்மாக்கு அரிசிச் சோறு வாய்ச்சுதா என்ன? பாதிக்குப் பாதி நாளு பட்டினிதான்....”

சின்னப்பொண்ணு.. கண்ணு முழி பிதுங்குவது போல் துடித்தாள்.

“இது என்னாடிம்மா அதிசயமாக்கீது? இவ எல்லாருக்கும் வாய்க்கரிசி தர்றா..அப்பன் ஆயி ரெண்டு பேரும் வாய்க்கரிசி கூட வாங்காம வந்திருக்காவோ...?”

“யம்மாடி சின்னப்பொண்ணு..இப்படி ஆச்சே பொழப்புன்னு நீயும் உசிரை விட்டுடாதே. ஒனக்குக் கீழ ரெண்டு குருத்து நிக்குதுங்க..அப்பன் ஆயியா நீதான் காப்பாத்தணும்...”

மாரியம்மா..ஆற்றாமை தாளாமல் தொண்டை அடைக்கச் சொன்னாள்.

“இருசப்பனுக்கு இன்னுமா கோவம் தீரல? உசிரோட பறிகுடுத்துமா பழி தீரல? இந்தா..இருக்கற வரைக்கும் நெருப்புக் கங்காப் பத்திட்டு இருந்தாக. இப்ப நிமிசமாப் போய்ச் சேர்ந்தாச்சு. இருக்கறப்ப கொண்டு குடுத்து இருந்தாத்தான நிம்மதி? என்னாத்த வாரிக்கினு போவப் போறம்?”

“சின்ராசு கைல சொல்லி- சாக்கடைக்கு சிமிட்டி மூடி போடச் சொல்லோணும். இல்லேன்னா இன்னம் எத்தனை உசிரைக் காவு வாங்குமோ? எத்தினி தரம் வாரபோற ஐயாமாருகிட்டச் சொல்லியாச்சு? ம்? அல்லாரும் ஓட்டு வாங்கத்தான் வரானுவ. அப்பறம்- ரோடு, மேடு, பள்ளம், சாக்கடைக்குழி, கொசு, சாக்கடை, நாத்தம் அடிக்கற குடிதண்ணி எல்லாக் கண்றாவியும் நம்ம கூடவே தான் இருக்கு. யாரு கவலைப்படுதா நம்மளப்பத்தி..?”

ஏற்கனவே தாழாங்குப்பத்து மாடுகள் ஆடுகள் தவறி விழுந்து கால் முறிந்த சாக்கடைக் குழி தான் அது. குழந்தைகள் கூட விழுந்திருக்கின்றன

சாக்கடைக்குள் குதித்துக் காப்பாற்றி இருக்கிறார்கள். மழையில்லாத நாளில் குழிக்கு அடையாளமாக செத்தை, முள், குச்சி, கம்பி என்று எதையாவது போட்டு மூடுவார்கள். மழையில் அதெல்லாம் எங்கே அடித்துக்கொண்டு போனதோ? இங்கே மட்டுமில்லை. பக்கத்துக் குப்பங்களில் கூடக் காவு வாங்கும் மூடியில்லாத சாக்கடைக் குழிகள் நிறையவே உண்டு.

அத்தனை சனமும் பாக்கியில்லாமல் சின்னப்பொண்ணு அருகில் குந்தியிருந்து காது மாற்றிக் காது கதை பேசியது. பாடு பேசியது. துக்கம் விசாரித்தது. சடலம் என்று இல்லாத சாவுக்கு என்னவென்று சொல்லியழ? செத்தவர் உடம்பைப் பார்த்து மாரடித்துக் கலங்காமல் எப்படியழ? ஒன்றுமே புரியாமல் தலையில் கை வைத்து வருத்தம் சொன்னது. வேதனை சொன்னது.

விரிசல் விட்டிருந்த மண் சுவரில் சரிந்து தலையில் இடிவிழுந்த மாதிரி நொறுங்கிப் போயிருந்தாள் சின்னப்பொண்ணு. செல்வியும் தனமும் கூட ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாய்க் கைபிடித்துக் குந்தியிருந்தார்கள். உடம்பு சரியில்லாமல்..ஒரு மூலையில் நோக்காடாய்க் கிடந்தாலும் பரவாயில்லை. உசிரோடு இருக்கிறது உறவு என்று நிம்மதியாயிருக்கும். இது மாதிரி முழுசுமாய்க் கைநழுவி, கை கழுவிப் போனால் பதைபதைப்பாயிருக்கிறது. பூமி பிளந்த மாதிரி மனசும் விரிசல் காணுகிறது. ஆட்டம் காணுகிறது.

“முனிம்மாத்த ராங்கிக்காரி. தாவாங்குப்பம் முச்சூடும் இங்கன குந்தியிருக்கு. அவ இன்னம் கூட வந்து பாக்கல பாரேன். பவுசுக்காரி. சாடிக்கு மூடியாட்டமா சின்ராசுக்கு சின்னப்பொண்ணக் கட்டி வைக்கலாம். பெருசுங்களுக்கு அக்கறை இருந்தாத்தான? ம்?”

மறுபடியும் மாரியம்மா வருத்தமாய்ச் சொன்ன அடுத்த நிமிஷமே பதறிப் போய் வந்தாள் முனியம்மா.

“கோயிந்து..கோயிந்து. போயிட்டியாடி ராசாத்தி..முகம் பார்க்கக் கூடக் கொடுத்து வக்கலியே தாயே..ஏண்டிம்மா இந்தப் பாடு உனக்கு..”

மார்பிலறைந்து கொண்டு முனியம்மா ஓடியே வந்தாள் பின்னாலேயே பம்மிப் பம்மி வந்தாள் ராணி....

“அத்..அத்தே..அத்தே..அம்மா..அம்மாவுக்கு இப்பிடி ஆயிடுச்சே.. என்னைப் பெத்த அம்மா

**பார்க்க விரும்புறேனே உன்னைப்**
**பார்த்திருக்க தேடுறேனே**



**காண விரும்புறேனே உன்னைக்**
**கண்டிருக்கத் தேடுறேனே...”**

..முனியம்மாவைக் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்தாள் சின்னப்பொண்ணு. எத்தனை வருஷம் கழித்து அத்தையைத் தொடுகிறாள். கட்டிப் பிடிக்கிறாள் மருமகளாய்ச் செய்ய வேண்டியது போக இழப்புக்குச் செய்வது கொடுமை தானே.

மொத்தக் கும்பலும் அவர்களைத் திரும்பிப் பார்த்தது. இத்தனை வருஷத்தில் சாவு என்று வந்த பின்னால் தானே இந்த வீட்டு வாசல் மிதித்திருக்கிறாள் முனியம்மா. அத்தனை ஆங்காரம், அத்தனை பிடிவாதம். பரவாயில்லைதான். சாவு ஒன்றாவது அவளை இளக்கிக் கரைக்கக் கூடியதாய் இருக்கிறதே.

இறுக்கமாயிருந்தாள் ராணி.

அத்தனை துக்கத்திலும் நேற்று முழுசும் அம்மா இவளைப் பற்றியே கவலைப்பட்டுப் புலம்பினது ஞாபகம் வந்தது.

“கடைசியா அம்மா பேசினது கூட ராணியப் பத்தி தான். மாமாவோட மானம் கப்பலேறிடாம- எவங்கைலயாச்சும் புடிச்சுக் குடுக்கணும்னு புலம்பிட்டிருந்தா அத்தே...”

“ம்..ம்..இனிம இந்தப் பொட்டக்குட்டி காலு வூடு தாண்டாது. ஒடச்சி மொடமாக்கிடமாட்டேன்? பொலி போட்ருவன்னு சொல்லியிருக்கேன். கழுத்தை நெரிச்சுக் கொன்னுட்டு..நீயே வாய்க்கரிசி போட்டு எரிச்சுடுன்னு உன்கிட்டத் தள்ளிருவேன்..”

“என்னமோம்மா..சாவூட்டிலயாச்சும் ஒண்ணாயிட்டீங்களே சந்தோஷந்தான் இனிமயாச்சும் போக வார இருங்க..”

கூட்டத்தோடு கூட்டமாய் உட்கார்ந்திருந்த மாரியம்மாவுக்கு மூக்கு முட்டச் சந்தோஷம்....

எத்தனை வருஷமாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஆம்பளைத் துணையில்லாத குடும்பம். ரொம்பவும் வீம்பு பிடித்து ஒட்டாமல் உறவாடாமல் இருக்காதே. ஒத்தாசையாய் இரு என்றாலும் கேட்காமல், சிலுப்பினவள் தானே முனியம்மா. ராணியின் சடங்கு அன்றைக்கு வந்த சின்னப்பொண்ணை வீட்டுப்படி ஏற விடாமல் பேயாட்டம் ஆடினவள் தானே. பசங்களும் போக வர இருக்கக் கூடாது. பேசக் கூடாது. சிரிக்கக்

கூடாது. இப்படியெல்லாம் உத்தரவு போட்டு முறித்துக் கொண்டவள். இந்த மட்டுக்குமாவது வந்திருக்கிறாளே.

"சின்ராசுக்குச் சொல்லிவிட்டுருக்கா அத்தே..?"

"ம்.ஆமா மாரி ..சம்பத்து போயிருக்கு வெளில போக வரன்னுட்டு ஒத்தாசையா இருக்கறது அந்த ஒத்தப் புள்ளத்தானா? மத்த ஆம்பளைகளத் தான் திண்ணைக்குக் காவலா எளுதிவச்சாச்சே.."

"சரித்தே. சாவூடுதான். நெஞ்சு முச்சுடும் துக்கம் இருக்கு. அதை ஓரமா ஒதுக்கி வச்சுட்டு.இனி நடக்க வேண்டியதைப் பாப்பம்.."

அழுகையைத் துடைத்துக் கொண்டாள் மாரி.

"சின்னப் பொண்ணுதான் உன் மூத்த மருமவ. சட்டுபுட்டுன்னு நாளு பாரு..சின்ராசுவைத் தாலி கட்டச் சொல்லு. அனாதையா இதுங்களைத் தவிக்க விட்டுடாதே..ஒத்தைக்கொத்தை அத்தையா கைகுடு. கரையேத்து..சம்பத்தும் சரின்னு சொன்னா அவனுக்கொண்ணு கட்டி வச்சுப்புடலாம்."

ரெண்டு குடும்பத்துக்கும் பொதுவாய்ப் பேச்சு வார்த்தை நடத்தினாள் மாரியம்மா. கூடியிருந்த கும்பலும் ஒத்துப் பாடியது.

"அட..எல்லாம் பாத்தியதை உள்ளதுங்கதான? புதுசாவா கல்யாணம் பேச? ம்? முனிம்மா- நீயாவே கல்யாணத்தை நடத்திப்புடு இல்லாங்காட்டி- உங்க ராணியாட்டாம் சோடி சோடியா அலைய ஆரம்பிச்சுடுங்க..."

"அட அப்படிச் சொல்லாதீக..நாக்கு மேல பல்லு போட்டு என்னா பேசுதீக? கஞ்சிக்கு வக்கில்லேனாக் கூட மானம் போற பொழைப்பு மாட்டோம் நாங்க. தெருநாயா நாங்கள்ளாம்? ஆம்பள ருசிக்கு அலைய..?"

" அடிஆத்தீ.. நீ என்னாடி.. வக்காலத்து? எம்புள்ளிங்க மட்டும் என்னவாம்? அலையறவனுங்களா..?"

"அட..அட..அட..நிறுத்துங்கடி விட்டா..நிமிஷமாப் பத்திக்கறீங்களே.. வேற பேச்சே வேணாம். உங்கப்பன் ஆணை..ஆத்தாக்காரி ஆணை.. சீக்கிரமா இந்த வூட்டுல கல்யாணம் நடந்தாவனும் சின்னப்பொண்ணு முனிம்மாவோட மருமளாவணும். அம்புடுதேன்."

மாரியம்மா முடித்து வைக்கத் தலையாட்டியது கும்பல்.





"ஆமா..ஆமா..சுபச் சாப்பாட்டை விடக் கல்யாணச் சாப்பாடு போடுங்கடி..நாளாச்சு விருந்து சாப்பிட்டு.."

கிழிந்த ஆடைகளும் கிழிந்த கூரையும் துக்கத்தில் கிழிந்த மனசுமுள்ள அந்தக் குடிசையில் கல்யாணம் ஒன்று பேசப்பட்டது..ஒத்து ஊதப்பட்டது.

டுர்ரென்று வந்தது மொபெட்

சிலுசிலுவெனக் கலைந்த தலைமுடியோடு வந்தான் சின்னராசு பின்னாலேயே சம்பத்து.

மாரியம்மாதான் கூவினாள்.

"ஐயா...வந்தியா? பாரு. கேளு கொடுமையை..உங்கத்தை போன கதையக் கேளு. யாருக்கும் தீங்கு நினைக்காத செம்மம். யார்ட்டயும் அதிந்து பேசாத செம்மம். பேச வுடாத கடைசி முகம் பாக்கவுடாத வெள்ளம் அள்ளிட்டுப் போயிருச்சு. அந்தச் சாக்கடைக்குழி இன்னம் எத்தினி பேருக்குக் கல்லறையாவப் போவுதோ? கடவுளுக்குத் தான் வெளிச்சம் சின்ராசு..."

மாரியம்மா ..நிஜமாகவே துக்கப்பட்டு முந்தானையில் மூக்கு சிந்தினாள்.

"எம்ப்பா.உன்னை மாதிரி ஆளுங்க.அரசியல்வாதிங்க. தானே அதைச் சீர் பண்ணணும்? கவுன்ஸிலரு கைல சொல்லுப்பா. வயசான கிழம். கண்ணு தெரியாத கேஸுங்க நிறைய இருக்கு நம்ம குப்பத்துல..அதுங்க யாரும் விளுந்து தொலைச்சு மண்டையப் போடாம இருக்கோணும்..."

ஆளாளுக்குப் புகார் மனு வாசித்தார்கள்.

"அட..., இருங்கடி..மொறைப் பொண்ணுகிட்ட அவம் பேசட்டும். ரெண்டு வார்த்தை சொல்லட்டும். நீ போ சின்ராசு..."

ரெண்டெட்டில் வந்தான். மலர்மாலையோ வளையமோ கூட வைக்கவும்..கும்பிடவும் வக்கில்லாத சாவு..கோவிந்தம்மாவின் கையகல போட்டோ கூடக் கிடையாது. அதற்கெல்லாம் பவுசு இருந்தால் பிரச்னை இல்லியே..ஏதும் இல்லாத பண்டாரப் பசங்கள் தானே இதுகள்..?

"என்னா சின்னு இப்பிடி ஆயிடிச்சு.."

"பத்து முடிஞ்சாவுட்டு..உனக்கும் சின்னப்பொண்ணுக்கும் நிச்சயம் பண்ணிடலாம்னு அம்மாக்காரி ஒத்துக்கிச்சு சின்ராசு..உனக்கும் சம்மதம் தான..?"

" அட எவடிஇவ..கரும்புத் தின்னக் கூலி கேப்பாவளா? எங்க பொண்ணு கட்டிக் கரும்பு.."

"ப்ச..சும்மா இருங்க எல்லோரும்..இப்ப என்னா அவசரம் கொள்ளை போவுது? ம்? கொஞ்ச நாளு போவட்டும் பாக்கலாம்..."

சிடுசிடுத்தான் சின்னராசு..

"அட என்னாடி இது? இப்படிப் பாயறாங்காட்டியும்? மாப்பிள்ளையா லட்சணமா சிரிப்பாண்டியாப் பேசாம கடுப்புக்காட்டறானே..,?"

"பின்ன..? ஆம்பளையாளு எனக்குக் கல்யாணம் கட்டி வையி. பொண்டாட்டி வேணும்னு வாய்வார்த்தையாவா சொல்லும்..அம்மாக்காரிதான் புரிஞ்சுக்கோணும்.."

எதையுமே காதில் வாங்கவில்லை சின்னராசு.

"இந்தா சின்னு இதுல ஐநூறு ரூவா இருக்கு. செலவுக்கு வச்சிக்க. அப்பறம் பாப்பம்.."

இவள் கை நீட்டி வாங்காததால் ரூபாயை தனத்தின் கையில் திணித்துக் கிளம்பினான்-ரெண்டே நிமிஷத்தில்.

சாக்குப் போக்குச் சொல்லி எல்லாரும் கலைந்து போனாலும் கூட சின்னப்பொண்ணுவுக்கு மனசு ஆறவில்லை தான். ஏதோ நெருடல். ஏதோ ஒரு விலகல் தெரிந்தது சின்னராசுவிடம். அம்மாக்காரி...கைவிட்டு நழுவிப் போன துக்கத்தை விடவும்..அவனின் விட்டேத்தியான பேச்சும், நடவடிக்கையும் அதிக வருத்தமாயிருந்தது அவளுக்கு.



முன்னை யிட்ட தீ முப்புரத்திலே
பின்னை யிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னை யிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க! மூள்கவே!

-பட்டினத்தார்

## 17

"என்னா சின்ராசு? முளியே சரியில்ல?"

உடம்பு முழுசும் சர்ரென்று செண்ட் அடித்துக் கொண்டார் அவர்.

அவசரமாய்க் கிளம்பிக் கொண்டிருந்தார். வெள்ளையும் சொள்ளையுமாய் ஆளே மாறி விட்டார். கவுன்ஸிலராகி ஒரே வருஷத்திலேயே... நல்ல செழிப்பு தளதளப்பு.

பேச வேண்டிய குறிப்புகளையும் கோப்புகளையும் அடுக்கின சின்னராசு ஆச்சரியப்பட்டான். அதெப்படி மனசுக்குள் புகுந்து அவன் நினைப்பைப் படித்த மாதிரி கேட்கிறார்?

அவன் அவரின் நிழல் மாதிரி ஆகி விட்டான். சின்னராசு இல்லாமல் ஒன்றுமே ஆவதில்லை அவருக்கு. மூச்சுக்கு முன்னூறு தரம் சின்னராசு தான்.

"சின்ராசு எங்கன? சின்ராசுவக் கேளுப்பா.. சின்ராசு. ஐயாவுக்கு இதை முடிச்சுடு. சின்ராசு.. தலைவர்கிட்ட இதை கேக்கணும்..நினைப்பூட்டு".. சகலத்துக்கும் அவன் என்று ஆகி விட்டான். வர வேண்டியது.. வரவழைக்க வேண்டியது. கமிஷன், கலெக்‌ஷன் என்று எல்லாத்துக்குமே அவனைப் பழக்கி விட்டிருந்தார்.

"வண்டி தயாராயிருக்குங்கய்யா பேப்பர்லாம் பின்னாடி வச்சுட்டேன்.."

"அதை வுடப்பா..அதான் எப்பவும் இருக்கே..உன் முகம் வாடிருக்கே என்னாத்துக்கு-"

"ஒ. ஒண்ணுமில்லய்யா..நேத்து ராவுக்கு ஒரு டெத் ஆயிப் போச்சு. அத்தைக்காரியாவனும்..சாக்கடை குழில தவறி விழுந்திடுச்சாம். வெள்ளத் தண்ணி அடிச்சுட்டுப் போயிருக்கு பாடியக் கண்டு புடிக்க முடியல்லையாங்காட்டியும்.."

"த்சொ..த்சொ..பாவந்தான்..அதான் ஊரெல்லாம் வெள்ளமா ஒடுத.. பொட்டச்சி வூட்டோடக் கெடக்க வேண்டியது தானே?"

"நம்ப தொகுதிதான்ண அது..மராமத்து சரியாப் பண்ணலேன்னு பிலுபிலுன்னு புடிச்சிக்கிட்டாளுங்க. நாளைக்கு எலும்புத் துண்டாட்டம் எதையாச்சும் தூக்கிப் போட்டா எவளும் சட்டம் பேசமாட்டாளுக. அடுத்த எலக்சனுல நெஞ்ச நிமித்திட்டுப் போய் நிக்கலாம்.."

"ம்ம்..அதெல்லாம் நீ சரி பண்ணிடுன்னுதான சொல்லியிருக்கேன். அப்புறம் என்ன அண்ணாவி..?"

"ஆமாய்யா. அதுக்குத் தான் ரெண்டு பத்திரிகையாளுங்களை வரச் சொல்லியிருக்கேன். நீங்க அந்த தாழாங்குப்பத்துக்கு வரனும். சாக்கடை மூடி போடுற மாதிரி ஒரு போட்டோ..அப்புறம் அந்த சாவு ஊட்டுப் பொண்ணுங்களுக்கு ஆறுதல் சொல்லுற மாதிரி ஒரு போட்டோ ரெண்டும் பத்திரிகைல தட்டிவிட்டா அவனவன் அலண்டிருவான். அஸ்தில ஜுரம் கண்டுடும். அதுமில்லாம குப்பமே நமக்குன்னு ஆயிடும்.."

"நீ தான் பொறுப்பு சின்ராசு..எலக்சன்ல நெத்தியடி அடிக்கனும். அது உன் சாமர்த்தியம்..ஆமா..அத்தைக்காரிக்குப் பொண்ணுக..?"

"ம்..மொறைப் பொண்ணு இருக்கா..அடுத்து இரண்டு தங்கச்சிங்க. நேத்து சாவூட்டிலேயே கூட நிச்சயம் பேச ஆரம்பிச்சிட்டாங்க. அப்பன் ஆயி ரெண்டுமேயில்லாம அனாதையா நிக்குதுங்களாம்.."

"நீ பிடி குடுக்காத சின்ராசு..அரசியல்ல இறங்கினாவூட்டு உறவெல்லாம் மறந்துடனும். அத்தப் பொண்ணு மாமா பொண்ணு உறவெல்லாம் மறந்துடனும். கல்யாணம் கூடக் கணக்குப் போட்டுத் தான் பண்ணோனும். எதைக் கட்டிக்கிட்டா லாபமாயிருக்கும்னு நாலும் யோசிச்சுப் பார்த்துத்தான்





தாலியக் கைல எடுக்கோனும்..? புரியுதா? ஆமா. அந்தப் பொண்ணைப் புடிக்குதா?"

"ம்ஹீம்..வெட்டியானா இருக்கா..எனக்கே உதறிப் போடும் அவ தொழிலு பண்றதப் பார்த்தா.."

"பின்ன...? இருக்காதா..? ஆம்பளை பண்ணாலே பதறித் தூக்கிப் போடற வேலைய பொம்பளை பண்ணுதான்னா- அவ ஆம்பளையே தான். பொஞ்சாதி பொம்பளையா இருக்கனும்.. ஆம்பளைக் கணக்கா இருந்தா சொகமாவா இருக்கும்? குடும்பம் நடத்தத் தோதுப் பட மாட்டாளுக.."

அவர் ஏதோ கணக்குப் போட்டுத்தான் பேசுகிறார் என்பது தெளிவாய்த் தெரிந்தது.

"இப்ப நீயே யோசி சின்ராசு.. சகலத்துலயும் எனக்கு உதவியா இருக்கே..உம் மேல முழு நம்பிக்கை வந்துருச்சு. பெரிய அளவுல வருவ.. அவசரப்பட்டுக் கல்யாணத்துல மாட்டிக்காத..இன்னங் கொஞ்ச நாளு பளகிக்க..நம்ம பொண்ணையே கட்டி வச்சிடுறேன்.."

அவரின் மகளையா? பார்த்திருக்கிறான். தைராய்டு பிரச்சனையால் உடம்பு மதமதவென்று சின்னயானைக் குட்டி மாதிரி பெருத்திருக்கும். அவள் பக்கத்தில் சின்னராசு அவளின் ஒரு கை சைஸுக்குத் தான் வருவான். அவளையா?

"என் சொத்தெல்லாம் அவளுக்குத்தான்டா. குடிசைக்காரி வேணுமா..? மச்சு வீட்டுக்காரியான்னு முடிவு பண்ணிக்க.."

நன்றாக வேப்பிலையடித்தார்.

"சரி..குப்பத்துல அரைமணி நேரத்துக்கு மேலப் போயிடாமப் பாத்துக்க சின்ராசு. நாத்தம் குமட்டிட்டு வரும்..நானும் ஒரு காலத்துல தாமரைக் குப்பத்து ஆளு தான்..இப்ப லெண்டு ஏஸின்னு பளகினாவுட்டு. அந்த நாத்தம் குமட்டுது..அந்த ஜனங்க குமட்டுறாங்க. இனிம. பழைய குடிசை வாள்க்கைய நினைச்சாலும் வாள முடியாது. உனக்குக் கூட கொஞ்ச நாள்ல அப்பிடித்தான் ஆயிடும் பாரு.."

"ஆனா நாத்தம்..வோட்டுல இல்லியே.."

"அதனாலத்தான் எலக்சனுக்காவ அந்த நாய்ங்க காலைப் புடிக்கறோம். இல்லேன்னா இப்படிக் காரு பங்களா காசு மருவாதின்னு கெடைக்குமா சின்ராசு? ம்? இன்னிக்கு முக்கியமான புராஜக்டு கையெழுத்தாவுது. இருவது கோடி புராஜக்டு தலைவரு அன்னிக்கே கண்டிஷனெல்லாம்

சொல்லிட்டாரு. கூட்டத்தொடர் முடிக்கற அன்னிக்கு முடிச்சிறலாம்னுட்டாரு. அதான் இன்னிக்கு முடிஞ்சிடும். முளுசா ஒரு கோடியாச்சும் நிக்கும்."

கண்ணெல்லாம் ஆசை கொளுந்து விட்டு எரிந்தது.

"அரசியல்ல சட்டுன்னு செட்டிலாயிடணும் சின்ராசு..அப்புறம் நா ஒதுங்கிட்டு உன்னை எறக்கி விடறேன். மருமவனா நீயும் மருவாதியா அரசியல் பண்ணலாம்..சரியா?"

மறுப்புச் சொல்லக் கூடியதாக அவர் எங்கே..இவனைப் பேச விடுகிறார்? வாயே திறக்க முடியாமல் மௌனமாய் நின்றவன் கையில் ஒரு கத்தை மனுக்களைத் தந்தார்.

"இந்த மனு குடுத்த வெட்டியானுங்களை மொத ஒளிச்சுக் கட்டணும்.. அதுக்குத் தான். மெஷினால எரிக்கற திட்டம். நம்ம தொகுதிலதான் மொதல்ல அறிமுகம் பண்றோம் சின்ராசு. நாமதான் டெண்டர் எடுத்திருக்கம். பத்து வெட்டியானுங்க இருக்கற இடத்துல ரெண்டு மூணு பேரு இருந்தாப் போறுமில்ல? ராவாப்பகலா எரிக்கறோம். பொதைக்கறோம்னுட்டு..மெஷினு வாய் பேசாது. சோலியும் நிமிஷமா முடியும். வேலைய நிரந்தரமாய் ஆக்கு. கவன்மெண்டு சம்பளம் போட்டுக்குடுன்னு மெஷினு கேக்காதில்ல. டீக்கு பேட்டா குடு. டிபனுக்குக் குடு..மருத்துவ வசதி பண்ணிக்குடு அப்பிடி இப்பிடின்னு மனு குடுத்திருக்கானுவ நாத்தம் புடிச்ச நாய்ங்க..இதுங்களை ஒழிச்சுக் கட்டணும். அதுக்குத் தான் இந்த மெஷினு வைக்கப் போறோம்.. சுடுகாட்டுக்குன்னு ஏக்கரா கணக்கா நிலம் ஆர்ஜிதம் பண்ண வேணாம். பொறம்போக்கு எடம்னு கணக்குக் காட்டி ரெண்டு குடிசைய போட்டு வச்சம்னு வையி. கொஞ்ச வருஷத்துல எடம் நமக்குன்னு ஆயிடும். சிட்டிக்குள்ள. அவுட்டர்ல எங்கன்னாலும் நிலம் அத்தனையும் பவுனு சின்ராசு.."

கனவுகள்..கனவுகள்..அரசியல் கனவுகள்..வெறும் கையாலேயே முழம் போட்டு மாலை கட்டி விடும் வெற்றுக் கனவுகள். நம் இளைஞர்களை மயக்கி மழுங்கடிக்கும் கோடிக் கனவுகள். கதம்பக் கனவுகள் அந்த சாக்கடையை விட்டு வெளியே வர முடியாதபடிக்கு அதிலேயே உழல வைக்கும் மாயக் கனவுகள்.



சுடலையில் வரட்டியடுக்கி அதனுள் செங்கற்களை அடுக்கி வைத்து. சட்டைகளைப் பரப்பி சடலங்களை அடுக்கி வைத்து வரட்டியால் மூடி விட்டாள். செங்கல் சூளை மூட்டு போடுவது மாதிரி போட்டு எரியூட்டினாள் சின்னப்பொண்ணு.

மடக்கி வைத்து எரியூட்டப்பட்டிருந்த பிணத்தின் கை கால் முட்டியும் இடுப்புப் பகுதி எலும்பும் உஷ்ணமாகி டப்பென்று வெடித்துச் சிதறின. எழுந்து உட்கார்ந்தன பிணங்கள். சிதறிய பாகங்களைப் பொறுக்கிச் சிதையில் போட்டு முழுமையாக எரித்துக் கொண்டிருந்தார்கள் சின்னப்பொண்ணுவும் சம்பத்தும்.

யாருக்காகவும் காலம் நிற்குமா? சூரியன் சந்திரன் சுற்றுவதும் நிற்குமா? சின்னப்பொண்ணுவின் வீட்டில் துக்கம் என்பதற்காக மற்ற வீட்டில் சாவு நடக்காமல் போகுமா?. பிணம் விழாமல் காத்திருக்குமா? ஆள் விட்டு அழைத்து வர இதோ வேலையே குறியாயிருந்தாள் அவள்.

சுடுகாட்டின் அலுவலர் மணிமாறன் ரொம்பவே கடுப்பாகியிருந்தார். ஆஸ்பத்திரி ரயில்வே போலீஸ் சடலங்கள் பாட்டுக்குக் குவிந்த படியிருக்க மற்ற வெட்டியான்கள் ஒவ்வொருவரும் சாக்குப் போக்குச் சொல்லி அனாதைப் பிணங்களை எரிக்காமலோ புதைக்காமலோ நழுவினார்கள்.

"சரியா வேலை பண்ணுங்க..இல்லன்னா உங்களையும் சேர்த்து எரிச்சுடுவேன்..ஜாக்கிரதை.."

"அடப் போங்க ஸார்..பொணம் எரிச்சா வாய்க்கரிசியாவது தேறணும்.. அப்பத்தான் ஒரு வாய் டீயாச்சும் குடிக்க முடியும். விடு ஸார் உங்க வீட்டு பொணமா? என் வீட்டுப் பொணமா? நாறி அழுவட்டும்."

"கட்சிக்காரன்.அதிகாரிங்க வீட்டுப் பொணம்லாம் வேணாம் சார்.. ஐயாவுக்குத் தெரிஞ்ச டெத்துன்னு காசே குடுக்காம நழுவிடுவானுவ.. மண்ணெண்ணெய் ஊத்தி வறாட்டி அடுக்கி வச்சு ராவாப்பகலா நின்னு பொணத்தை எரிக்கறதுள்ளாற நாங்க உசிரோட எரிஞ்சு போறோம். இவனுங்க குடுக்கற பிச்சைக்காசு பத்துக்கும் இருபதுக்கும் உசிரைக் குடுத்து தொழில் பண்றோம் நாங்க.."

"அஞ்சு லிட்டர் மண்ணெண்ணெய் நூத்தம்பது வரட்டி மூணு குண்டு வெறகுன்னு முன்னுத்தம்பது ரூபாகிட்ட காசு போடறோம். பொணம் பக்கத்துல இருந்து முட்டுக் குடுக்கணும் சாம்பல் சேத்துக் குடுக்கணும்.

இத்தினி ரோதனைக்கும் உறவுக்காரனுங்க நாலு காசு குடுக்கறானுவளா? கஞ்சப் பசங்க. துக்கத்துல அழறதை விட வெட்டியானுக்குக் காசு குடுக்கத் தான் ஜாஸ்தி அழறானுவ. இந்த அளகுல.அனாதைப் பொணம் எரிச்சா அந்த உழைப்பும் தண்டமாயிடுது..''

"தெனமும் அஞ்சாறு பொணமாவது விளுந்தாத்தான் எங்களுக்கு நல்லது. விழணும்னு வேண்டிட்டுத்தான் கண்ணு முழிக்கோம். கார்ப்பரேசன்லேருந்து நாலு காசு சம்பளத்த- மாசாமாசம் குடுக்கச் சொல்லு சாரு. அப்பறம் நாங்க ஏன் வாய்க்கரிசிக்கு அலையறோம்? வேலைக்குச் சுணங்கறோம்..?"

"ஸார்..எங் குழந்தைங்க சாட்சியாச் சொல்றேன். இந்த டெட் பாடிங்களைப் பொணம்னு நினைக்கறதில்ல. நிம்மதியாய்ப் போன உசிரை.. நாங்க தான் கடைசியா வழியனுப்பறோம். சாக்கடை சுத்தம் பண்றது கூட நல்ல தொழிலு தான். அடுத்தவன் சாவுல உசிரு வாழ்றது கொடுமை..நரகம். சாபம். நாலு காசு கொஞ்சம் அரிசி..ஒரு முழத்துணி கூடத் தேத்த முடியாத அனாதைப் பொணம்லாம் என்னால எரிக்க முடியாது ஸாரு...''

ஆளாளுக்குத் தாட்சண்யமில்லாமல் மறுத்து விட எரிச்சலானார் மணிமாறன்.

"இப்பிடிச் சட்டம் பேசறீங்க..நாய்ங்க..அதான் உங்க எல்லாருக்கும் பதிலா மெஷினு வரப்போவுது. உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா கதை தான். சாவுங்க பொணந்தின்னிப் பசங்க..''

மனசாரத் திட்டி விட்டுத்தான் சின்னப்பொண்ணுக்கும் சம்பத்துக்கும் ஆள் அனுப்பினார்.

இதோ சோலி ஜரூராக நடக்கிறது.

நடுஜாமம் தாண்டிவிட்டது. சள்ளைப்படாமல் வேலை பண்ணினார்கள். மூணாம் நாளே கொள்ளிக்குச்சியைப் பிடித்து விட்டாள் சின்னப்பொண்ணு. சொந்த சோகமும் துஷ்டியும் அனுசரிக்கக் கூட விடாமல் துரத்தும் சமூகக் கடமை.

மூணுமூணரை இருக்கும். ராத்திரியின் மயான அமைதி அங்கங்கே மினுக்மினுக்கென்று விளக்கெரிந்தது. சிதை நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. அங்கங்கே ஊளையிடும் நரிகள் நாய்கள். காற்றில் பிணவாசனை. சடலம் எரியும் நாற்றம்.

அமைதியான ஊர். அமைதியில்லாத வெட்டியான்.



ஓய்வெடுத்து உறங்கும் ஜனங்கள். ஓய்வைத் துறந்து ... சிதை நெருப்பின் புகை. ஹோவென்று பந்தாய்க் கிளம்ப மூச்சடைத்து மூச்... விடாமல் இருமினாள் சின்னப்பொண்ணு.

"ரொம்ப இருமலா இருக்கு..?"

"ப்ச..இப்பல்லாம் ஒடம்பு ரொம்ப நோக்காடாச்சு..''

"மருந்து மாத்திரை?"

" அதுக்குப் பவுசு இருந்தாத்தான். நாலு நாளுக்குக் கம்மஞ்சோறு ஆக்கித் துன்னலாமே...''

"எங்கப்பன் தாத்தா மாதிரி ஆயிடாம...''

"என்னது?"

"காசம்தான்"

"ம்..அதானோ என்னவோ... யாரு கண்டா...இந்த நெருப்புக்கு எல்லாந்தான் வரும்.. ப்ச. நாளைக்கே செத்தாக்கூட நஷ்ட ஈடு எதுனா கெடைக்கவா போவுது? அம்பது நூறுன்னு செலவு பண்ணி..மத்த வெட்டியானுங்கல்லாம் காசு போட்டுத்தான் எரிக்கணும். இல்லாக்காட்டி அனாதைப் பொணமாத்தான் அளுகிப் போய்க் கெடப்பேன்..''

வறட்டியை அடுக்கி மண்ணெண்ணெய் தெளித்தாள்.

"நீயாச்சும் வேற வேலைக்கு போவக் கூடாதா சம்பத்து?. சாம்பல் அடிச்சுக் கண்ணு போன தாத்தா. ரௌடிங்க அடிச்சுப் போட்ட அப்பன். புத்தி பேதலிச்சு சுரேசு, பைத்தியமாயி ஓடிப் போயிட்ட எங்கப்பன்..இத்தினி பேரையும் காவு வாங்கிருச்சு. ஒங்க வூட்டுல மிச்சமிருக்கிற திண்ணைய நீ ரொப்பணும்னு ஆசையா?"

"வேற என்னா வேலை கெடைக்கும் ? சின்ராசு அண்ணனாச்சும் கை... தூக்கி விடுவாம்னுதான் பாக்கேன்".

நம்பிக்கையோடு பிணமெரித்தான் சம்பத்து.

"கொஞ்சம் வெறாட்டி போடு. பருப்பு நெய் டால்டான்னு தின்ற பணக்காரப் பொணம்னா புஸ்ஸுன்னு பத்திக்கும் . இதுங்கள்லாம் நாதியத்த அனாதைப் பொணங்க எரியக் கூட முரண்டு புடிக்குதுங்க. இந்த அளகுல பொணத்துக்குள்ளாற பாட்டில் வேற வெடிக்குது. தீவாளி டப்பாசாட்டம்.''

வெட்டிக் கம்பால் புரட்டிக் கொடுத்தாள்.

“சரி கொஞ்சம் பாத்துக்க ஓரமாக் குந்திட்டு வாரேன்..”

சம்பத்தின் பார்வையிலிருந்து விலகிப் புதரின் பின் பக்கம் நடந்தாள் சின்னப்பொண்ணு. குந்தினாள். ரெண்டு நாளாய்ச் சோறு தண்ணியில்லாமல் வெறுமனே டீ குடித்துக் குடித்து. தம் பிடித்து சடலம் எரித்து முடித்ததில் உடம்பு முழுசும் நாறியது. வியர்வை நாற்றம். சடலத்தின் அழுகிய புழுக்களின் நாற்றம் கூடவே தீட்டு நாற்றம். தீட்டுத் துணியின் நாற்றம். குளிக்கவில்லை. வெளிக்குப் போகவில்லை. ரெண்டு துணியைக் கையோடு கொண்டு வந்து இந்தப் புதர்மறைப்பிலேயே மாற்றிக் கொண்டாயிற்று. எழுந்தாள். நிம்மதியாயிருந்தது. வயிற்று வலியும் கால் வலியும் பின்னியது. பின்னாலேயே மோப்பம் பிடித்து ஓடி வந்த நாயை விரட்டினாள்.

“ச்சூ...ஓடிப்போ..பொம்பளைன்னா நாயி கூட பின்னால அலையுது.. நேரம் பொளுது பாக்காம...த்தூ..”

வானம் லேசாய் வெளுக்க ஆரம்பித்திருந்தது.

“நாலரை மணியிருக்கும் போல..சோலி முடிச்சுக் கெளம்பணும்.. டீ குடிக்கோணும்..சம்பத்து பயலுக்கும் தரணும்..பாவம் சின்னப்பையன். சம்பாத்தியமே இல்லாத குடும்பம். அவுக அண்ணங்காரனும் மறந்துட்டாப்பல தெரியுது..ஒட்டுதல் இல்லாம அறுத்துக்கிட்ட மாதிரியில்லா இருக்கு.. அப்பப்ப நாந்தான் அவுக வூட்டையும் பாத்துக்கணும்..இனிம அத்தைக்காரி ஒத்தாசைக்கு யாருமில்லாத என்ன பண்ணுவா?” தனக்குத் தானே வாய்விட்டுப் பேசியபடியே சுருக்குப் பையை அவிழ்த்துச் சில்லறையை எண்ணினாள். ஒரு டீக்குத்தான் காசு தேறியது..மெதுவாய் நடந்தாள்.

“சரி..பப்பாதி குடிச்சுக்கலாம்..சம்பத்து முடிஞ்சுதா சோலி...?”

முந்தானையால் முகத்தை அழுத்தித் துடைத்தாள்.

“ஓ..ஓ..ஆ...ஆ...அம்மா ஓடியா..பொண்ணுக்கா ஓடியா..ஐயோ எரியுதே.. எரியுதே ஓடியாக்கா..ஐயோ கண்ணு..”

அவனின் குரல் மயானத்தின் அமைதியைக் குலைத்துப் போட்டது. காற்றை அறுத்தது அந்தக் குரல்.

சம்பத்தா? சம்பத்தா கத்துவது? என்னாச்சு?

ரெண்டெட்டில் விழுந்தடித்து ஓடினாள் சின்னப்பொண்ணு. சம்பத்து தரையில் விழுந்து புரளுவது சிதை நெருப்பு வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. உருண்டு புரண்டு கத்திக் கதறித் தடுமாறிக் கூவினான் அவன்.





“ஐயோ எரியுதே கண்ணு...அவிஞ்சு போச்சே..கண்ணு எரியுதுக்கா உசிர் போவுது..”

“ஏய் சம்பத்து என்னாச்சு? வெட்டிக் கம்பாலக் குத்திக்கிட்டியா..?”

பாய்ந்து அவனைப் பிடித்தாள். வலி தாங்காமல் துடித்தான் துள்ளினான்.

“பாட்டிலு பாட்டிலு வெடிக்சிருச்சுக்கா. கண்ணுல பாய்ஞ்சிருச்சு பாரு வலிக்குது..உசிரு போவுதுக்கா..”

கையெல்லாம் கொளகொளவென்று ரத்தம் வழிந்தது. மூடியிருந்த அவனின் கையை விலக்கினாள். நடுவிரல் அளவுக்கு தடித்த கண்ணாடித்துண்டு கண்ணைக் கிழித்துச் சொருகி நின்றிருந்தது. கண்ணை இமைக்க முடியாமல் கொட்டும் ரத்தத்தை நிறுத்த முடியாமல் துடித்தான் கதறினான்.

ஆஸ்பத்திரி சடலமாயிற்றே..உள்ளே வைத்துத் தைத்திருந்த பாட்டில் வெடித்துக் கண்ணில் பாய்ந்திருக்கிறது. வலது கண்ணின் கருவிழியில் சிதைத்துச் செருகியிருந்தது.

“இப்ப என்ண பண்ண? கண்ணாடியைப் புடுங்கிடறேன் இரு..”

“ஐயோ..தொடாதே..வலிக்குது..வலிக்குது...”

“வா.. ஆஸ்பத்திரிக்குப் போவலாம்..”

மெதுவாய்த் தூக்கினாள் அவனை.

“போச்சு..இனி நா குருடு தான். ஒத்தக் கண்ணுதான். என்னை விடு. இந்த நெருப்புல நாவுழுந்து சாவறேன். வுடு ..என்னை வுடு..” முரண்டு பிடித்தான்.

“ஐயோ சம்பத்து.. அப்படி எதையாச்சும் பண்ணிடாத.. அம்மாக்காரியெல்லாம் உனக்காவ உசிரோட இருக்காக..நினைப்பு வெச்சுக்க.”.

மெதுவாய் நடத்திக் கூட்டி வந்தாள். நாய் துரத்திப் பின்னாலேயே ஓடி வந்தது. ரத்தத்தை மோந்து பார்த்தது.

“ஒரு நிமிசம் நில்லுக்கா..” தயங்கினான்.

“என்னா சம்பத்து? நாழியாவுது..ரத்தம் கொட்டுது பாரு..”

“ப்ச.. வலிதான். வுடு. ஒரு குண்டு வெறகு போட்டுட்டு வந்துடுக்கா.. இல்லேன்னா நெஞ்சுக்குழி சரியா வேகாம அரைகுறையாக் கெடக்கும் பொணம்..பாவம்.”.

"பரவால்ல சம்பத்து. உசிரோட இருக்கற நீ தான் முக்கியம் வா."

"இல்லக்கா..போட்டு வந்துரு..மனசு கேக்கல்ல..யாரு பெத்த புள்ளையோ.நல்லபடியாய்ப் போயிச் சேரட்டும். நம்மால ஏன் பாதகம்?"

மரத்தில் சாய்ந்து கண் ரத்தம் வழிய நின்றான் சம்பத்து.

அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துச் சிதை நோக்கி நடந்தாள் சின்னப்பொண்ணு. கொஞ்சம் வரட்டியையும் விறகையும் இறுக்கமாய் அடுக்கினாள். மண்ணெண்ணெய் தெளித்தாள். கூடவே விழுந்தது அவளின் கண்ணீரும்.

யுகயுகமாய்ப் பாரபட்சமில்லாமல் எரிந்த மாதிரி மேலே மேலே மேலே எழும்பியது ஜுவாலை. மனிதனைப் பஸ்பமாக்கியது நெருப்பு. தகித்த சிதைத் தீயின் பின்னால் மேலே எழும்பியது கூடவே சூரியனும்...

நெருப்பு இனிது.... தீ இனிது.அக்கினிக்குஞ்சும் அப்படியே....